நாம் எடுத்துக் கொள்கிறோம். 20 ஆண்டுகள் கோரிக்கை என்று சொல்லுகிறார்கள். 30 ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருக்கிற பணியை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் வருகிறபோது இது இன்னும் கொஞ்சம் தள்ளிப்போக வேண்டிய அவசியம் வந்து விடுகிறது. இருந்தாலும் கொஞ்சம் தனி கவனத்தைச் செலுத் தலாம்.

குமரி மாவட்ட கடற்கரையோர இணைப்புச் சாலைகள், இணைப்புப் பாலங்கள் பணி.

47—(*வினா எண் 13169) திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்ட கடற்கரையோர இணைப்புச் சாலைகள், இணைப்புப் பாலங்கள் பணி எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, கன்னியாகுமரியிலிருந்து நீரோடி வரை தொடர் சாலை ஒன்றினை, பன்மாநில பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு கடனுதவியுடன் அமைக்க, கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எப். எம். இராசரத்தினம்: தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரியிலிருந்து நீரோடி வரை கடலோரச் சாலை அமைக்க வேண்டுமென்று திட்டம் உருவாக்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இதற்காக திட்ட மதிப்பீடு எதுவும் தயாரிக்கப்பட் டுள்ளதா? எத்தனை இடங்களில் இணைப்புச் சாலைகள், இணைப்புப் பாலங்கள் அமைக்க வேண்டுமென்று அறிவுரை எதுவும் தரப்பட்டுள்ளதா? அப்படியானால், இதற்கென்று தனித் திட்டம் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர் களே, இதை மாநில அரசு தன்னுடைய பொறுப்பிலே செய்வது என்பது முடியாத காரியம். காரணம் மிகப் பெரிய செலவினத்

தைச் செய்ய வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இது கேரள மாநிலத்தையும் இணைக்கின்ற சாலையாக அமைகின்ற காரணத்தால், மத்திய அரசினுடைய நிதி உதவியோடுதான் நாம் செய்யவேண்டும். அதற்காகத்தான் மத்திய அரசுக்கு நாம் திட்டத்தைத் தீட்டி அனுப்பியிருக்கிறோம். எந்தெந்த இடத்திலே எந்தெந்த பாலத்தை அமைப்பது, எங்கே இணைப்புச் சாலையை ஏற்படுத்துவது என்பதற்கான விளக்கம் இப்போது என்னிடத்திலே இல்லை. ஆனால் மொத்தமாக ஏறத்தாழ ரூ. 1,520 லட்சங்கள் செலவழிக்கவேண்டும் என்ற கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். அது மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அதில் என்ன முடிவு ஏற்படுகிறதோ, அதைப் பொறுத்துத்தான் பணியைத் துவக்க முடியும்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கடற்கரை ஓரத்தில் உள்ள முட்டம்-பிள்ளைத்தோப்பு இணைப்புச் சாலை, மணவாளக்குறிச்சி பாலம், குளச்சல் சைமன் காலனிபாலம் ஆகிய அமைப்புப் பணிகள் மிகவும் மெதுவாக நடைபெற்று வருகின்றன. எனவே இதைத் துரிதப்படுத்தி இந்த ஆண்டே பணியை முடித்திட அரசு அறிவுறுத்துமா? மேலும், மேலமணக்குடி, கீழமணக்குடி இணைப்புப் பாலம் மிக முக்கியமான பாலமாக, கடற்கரையோர இணைப்பு பாலமாக அமைய வேண்டுமென்று நீண்டகாலமாக அந்தப் பகுதியில் உள்ள கடற்கரையோர மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தத் திட்டம் உருவாக ஏதேனும் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா? இந்த ஆண்டிலாவது இந்தத் திட்டம் உருவாக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி வேறு. உறுப்பினர் இப்போது கேட்கின்ற கேள்வி வேறு. எனவே அதற்கான விளக்கம் என்னிடத்திலே தற்போது இல்லை. ஏறத்தாழ, அவருடைய தொகுதியிலே என்னென்ன வேலைகள் இருக்கின்றனவோ, அவற்றை ஒட்டுமொத்தமாக, வாய்ப்பு கிடைத்துவிட்ட காரணத்தால் சொல்லிவிட்டார்கள் என்று கருதுகிறேன். எனவே தனிக்கேள்வியாகவோ அல்லது நேரிலோ இவற்றைப் பற்றிக் கேட்கிறபோது, இவை என்ன நிலையில் இருக்கின்றன, என்ன செய்யவேண்டும் என்பதைப்

பார்த்து நடவடிக்கை எடுக்கலாம். சிலவற்றிலே தாமதமாக வேலைகள் நடக்கின்றன என்று சொன்னார்கள். அதிலே தனிக் கவனம் செலுத்துவதற்கான அறிவுரையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கலாம்.

பி.எச்.ஈ.எல். தொழிற்சாலைக்கு உப பாகங்கள் செய்து தர சிறு தொழிற்கூடங்கள்.

48—(*வினா எண் 13564) திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதியில், துவாகுடி ஊராட்சி (பேரூராட்சி), கூத்தப்பார் பேரூராட்சி, திருவெறும்பூர் பேரூராட்சி, கூண்டூர் ஊராட்சிப் பகுதிகளில் பி.எச்.ஈ.எல். தொழிற்சாலைக்கு உப பாகங்கள் செய்துதர எத்தனை சிறுதொழிற் கூடங்கள் உள்ளன?

(ஆ) இதனால் அரசுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கிறது?

(இ) இந்தத் தொழிற்கூடங்களில் நிரந்தரத் தொழிலாளர்கள் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 135 இடங்கள்.

(ஆ) தனிப்பட்ட தொழில் முனைவோரின் பராமரிப்பில் இவை இயங்கி வருகின்றன. இத்தொழிலிலிருந்து அரசாங்கத்திற்கு எந்தவிதமான வருமானமும் இல்லை.

(இ) மொத்தம் அங்கே பணியாற்றக்கூடியவர்கள் தோராயமாக 2,505 பேர்கள்.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பாய்லர் தொழிற்சாலைப் பகுதியில் 135 தனியார் சிறு தொழிற் கூடங்கள் இருப்பதாக இங்கே சொன்னார்கள். நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது. 135 தொழிற்சாலைகளும் பெல் தொழிற்கூடத்தை நம்பி இருக்கின்றன. இந்தத் தொழிற்கூடங்கள் தமிழ்நாடு அரசின்